விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 069 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 14 திங்கட்கிழமை (26.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பான புதிய

## நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு ஆதரவளிக்க சுவிட்ஸர்லாந்து மறுப்பு

(பேர்ன்)

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு தீர்வு காணும் முகமாக இலங்கை அரசாங்கம் புதிதாக கொண்டு வர எத்தனித்துள்ள உண்மை, ஐக்கியம் நல்லிணக்க ஆணைக் குழு தொடர்பில் சுவிட்ஸர் லாந்து அரசாங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் புதிதாகக் கொண்டுவர எத்தனித்துள்ள உண்மை, ஐக்கியம், நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சுவிட்ஸர்லாந்து தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

இதுவரை காலமும் இலங்கையில் ஆட்சியாளர்கள் நல்லிணக்கத்திற்கான வேலைத்திட்டங்களை

11

### இணையப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்

அமெரிக்க பிரதிச் செயலரிடம் அலி சப்ரி உறுதி



(கொழும்பு)

இணையப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர்

11

### அரசியல் தீர்வைப் பெற

## தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை அவசியமானது

தென்கயிலை ஆதீன முதல்வர்


(யாழ்ப்பாணம்)

"தமிழினத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் துரோகம் செய்து கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டாம். அது எமது தமிழின இருப்பைச் சிதைக்கும் என

04

# ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

- இலங்கை மீது உலக நாடுகள் கடும் அதிருப்தி
- பொறுப்புக்கூறலில் இருந்து நழுவுகிறது அரசு



(கொழும்பு) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதிவரை இடம்பெறவுள்ளதுடன் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தெடர்பில் மார்ச் மாதம் 4ஆம் திகதி ஆராயப்படவுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தலைமையில் யாழில் விசேட கூட்டம்

காணிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு

3 ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் அபிவிருத்திக்கு அதிகாரப் பகிர்வு அவசியம்

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இடித்துரைப்பு

5 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில்

3600 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியம் "ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் 2024/2025" திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகை

11

## தரம் 6 இல் இருந்தே கல்வி மறுசீரமைப்பு

கல்வி அமைச்சர் விளக்கம்



(வராப்பிட்டிய)

6ஆம் தரத்திற்கு மேலான மாணவர்களுக்கு பாடசாலையில் கற்கக்கூடிய பாடங்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் 07 பாடங்களாக குறைக்க நடவடிக்கை

11

## தீ மூட்டி எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

தீ மூட்டியவர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தி

04

## நிர்வாக சபையின் அனுமதியுடனே சம்பளம் அதிகரிக்கப்பட்டது

சர்ச்சை குறித்து மத்திய வங்கி விளக்கம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடனும், தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே தமது ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்

11

## அரச கொள்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

மகிந்தவிடம் தேரர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தேசிய வளங்களினை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட நாட்டின் முன்னணி தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படாமல், கொழும்பில் உள்ள முக்கிய விகாரை யொன்றில் இடம்பெற்ற இரகசிய சந்திப்பிலேயே குறித்த விடயங்கள்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 06 . 1960

இறப்பு
25 . 02 . 2024

# இராசதுரை இரகுராதா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இரகுராதா அவர்கள் நேற்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற சபாரத்தினம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நிர்மலாவதியின் பாசமிகு கணவரும் பத்மாவதியின் (சித்தி) வளர்ப்பு மகனும் வினோதா, தர்சன், கனிதா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் கெங்காதரன், ரமணி, சசிகலா, ஜெயகலா, சந்தணகோபால், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுவிர்தன், அக்ஷயா, சால்டினா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2024) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செல்லம் மில் வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-8412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தலைமையில் யாழில் விசேட கூட்டம்?

## காணிப் பிரச்சினைக்கும் தீர்வு

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளதாக தகவல் அறிந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



அதன்படி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்நாளை 28 மற்றும் நாளை மறுதினம் 29 ஆம் திகதிகளில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அமைச்சுக்களின் செயலாளர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினைத் தொடர்ந்து இரு மாவட்டங்களிலும்உள்ள காணிதொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நடமாடும்சேவையொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கடனுக்காக அதிக வட்டியை செலுத்தும் நாடாக இலங்கை

(கொழும்பு)

உலக வங்கியின் அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கு அமைய அரச வருமானத்தில் இருந்து கடனுக்காக அதிக வட்டியை செலுத்தும் நாடு இலங்கையே என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் 2000 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் அதன் வருமானத்திலிருந்து கடனுக்காக 33 சதவீத வட்டியை செலுத்தியது. அதன்படி அந்த ஆண்டில் கடனுக்காக வட்டி செலுத்தும் நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில் இருந்தது

2010 ஆம் ஆண்டு கடனுக்காக அதிக வட்டி செலுத்தும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் காணப்பட்டது. அந்த ஆண்டில் செலுத்திய வட்டியானது அரச வருமானத்தில், 42 சதவீதமாகும்.

பின்னர் இலங்கை தமது அரச வருமானத்தில் 71 சதவீதத்தை 2020ஆம் ஆண்டிலும் 2023ஆம் ஆண்டு 77 சதவீதத்தையும் கடனுக்கான வட்டியாக செலுத்தியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2020 ஆம் ஆண்டில், அரச வருமானத்திலிருந்து கடனுக்கு அதிக வட்டி செலுத்தும் நாடுகளில் லெபனான் முதலாம் இடத்தில் காணப்பட்டது. அது அரச வருமானத்தில் 95 சதவீதமாக காணப்பட்டது.

2000 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கடனுக்காக அதிக வட்டியை செலுத்தும் நாடாக இலங்கை காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரல தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்களில் 41 சதவீதமானவர்கள் தொழில் வல்லுநர்கள் அல்லது ஏதோ வகையில் திறமைமிக்கவர்கள் என புலம்பெயர்ந்து செல்லும் இலங்கையர்கள் தொடர்பான அறிக்கையொன்றில் தெரியவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன்படி ஒரு வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் அல்லது வேலைக்காக வெளிநாடு செல்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தேசபந்து தென்னக்கோனுக்கு மீண்டும் சேவை நீடிப்பு

(கொழும்பு)



பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்குவதற்காக அரசியலமைப்பு பேரவைக்கு முன்மொழிவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு 3 மாத காலத்துக்கு வழங்கப்பட்ட நியமனம் இம் மாதம் 29 ஆம் திகதி நிறைவடையும் நிலையிலேயே மீளவும் சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (நி)

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஆளும் கட்சிக்குள் பிளவு

## ஜனாதிபதி-பசில் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதி தீர்மானம் எடுக்கும் வகையில் ஜானாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜனாதிபதி தேர்தலை கருத்தில் கொண்டு வேட்பாளரை தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதி தீர்மானம் எடுக்க எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி இருவரும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு பசில் ராஜபக்ஷ கடந்த டிசெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு சென்றிருந்துடன் ஜனவரி மாதம் இறுதியில் நாடு திரும்புவதாக இருந்த போதிலும் இதுவரையில் பசில் ராஜபக்ஷ நாட்டுக்கு வரவில்லை. இவ்வாரம் இறுதியில் அவர் இலங்கைக்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# கண்காணிப்பு கப்பலை இலங்கைக்கு வழங்கும் அமெரிக்கா

(கொழும்பு)

முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் ராஜாங்க செயலாளர் ரிச்சட் வெர்மா தெரிவித்துள்ளார். கொழும்புக்கு பயணம் செய்த அவர் கொழும்பு துறைமுகத்தில் வைத்து இதனை அறிவித்துள்ளார்.

விஜயபாகு என்ற பெயரைக் கொண்ட மூன்றாவது கண்காணிப்பு கப்பலை இலங்கையின் உரிமைக்கு மாற்றும் நிகழ்வின் போதே அவர் இதனை அறிவித்துள்ளார். இந்த நிலையில் நான்காவது கப்பலுக்கான முயற்சிக்கு 9 மில்லியன் டொலர் நிதியுதவியை அமெரிக்க ராஜாங்க திணைக்களம் வழங்கியுள்ளது.

இது அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது-தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்தில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த வருடத்தில் 5 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த பிரிவு குறிப்பிடுகின்றது.

இதேவேளை ஜனவரி மாதம் வரை 60இற்கும் மேற்பட்ட டெங்கு அபாய வலயங்கள் காணப்பட்ட நிலையில் 24ஆக குறைந்துள்ளது.

இதற்கமைய, பெப்ரவரி மாதத்தில் 5,181 டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் ஜனவரி மாதத்தில் இலங்கையில் 10,417 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இந்த வருடத்தில் நாட்டில் 15,598 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி)

# அதிக விலைக்கு விற்கப்படும் கீரிச்சம்பா-ஆலை உற்பத்தியாளர்கள்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக கீரிச்சம்பா அரிசி விற்பனை செய்யப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர ஆலை உற்பத்தியாளர்களின் ஊடக சந்திப்பின் போதே உற்பத்தியாளர்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டி உள்ளனர்.

ஆலை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் யூ.கே. செமசிங்க தொடர்ந்து தெரிவிக்கையில் கீரிச்சம்பா அரிசி கட்டுப்பாட்டு விலையான 280 ரூபாவை விட 380 ரூபா மற்றும் 400 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு முன்வைத்தார்.

இது குறித்து நுகர்வோர் அதிகார சபை முறைப்பாடு செய்ய வில்லையென அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் போது ஏனைய அரிசி வகைகளின் விலை அதிகரிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக்கிண்ணம்

## வாமணன், கேதீஸ் அதிரடி துடுப்பாட்டம்

## ஜொலிஸ்ரார் அணி வெற்றி


வாமணன் (55 ஓட்டங்கள்)



கேதீஸ் (45 ஓட்டங்கள்).




வளர்மதி விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கடந்த 23 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற முதலாவது தகுதி காண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி யூனி யன்ஸ் அணியுடன் விளையாடிய போது ஜொலி ஸ்ரார் அணி யூனியன்ஸ் அணியை 71 ஓட் டங்களால் வெற்றி பெற்று தமது முதல் வெற் றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 254 ஓட்டங்களை பெற்றனர்.

வாமணன்-55,கேதீஸ்-45,சஜீகன்-41 ஓட்டங் களை பெற்றனர்.

டிபவ்ரன் 19 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கு களையும் மோகன்ராஜ்72 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

252 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய யூனியன்ஸ் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 180 ஓட்டங்களை பெற்றனர்.

மகீஸன்-52 தரன்-20 ஓட்டங்களை பெற்றனர். ஜொலிஸ்ரார் அணிசார்பாக மதூஸன் 10 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் துஸ்சியந்தன் 18 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக வாமணன் தெரிவு (ட)

### ஐ.நா...

இம்முறை இலங்கையின் செயற் பாடுகள் தொடர்பில் தனது அதிருப்தியி னையும் கண்டனத்தையும் மனித உரிமைகள் பேரவை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தினால் ஊடகங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு சர்வதேச நாடுகள் தமது கண்டனங்களைத் தெரிவித்தி ருந்தன .

அத்தோடு புதிதாக முன்வைக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த எடு த்துவரும் முயற்சிகளுக்கும் சர்வதேச நாடுகள் கடும் அதிருப்தி வெளியிட்டி ருந்தது.

இந்நிலையில் இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இவ்விடயங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகள் இலங்கை மீது கேள்விகளைத் தொடுக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே இக்கூட்டம் தொடர்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தலைமையிலோ அல்லது வேறு எந்த உத்தியோகபூர்வமான அமைச் சர்கள் தலைமையிலான குழுவினரோ பங்கேற்க மாட்டர்கள் என அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கையில் ஏற்பட் டுள்ள மனித உரிமைகள் முன்னேற் றகரமான விடயங்கள் தொடர்பில் ஜெனி வாவில் உள்ள வதிவிட பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்கவே விடயங் களை கையாளவுள்ளார்.

குறிப்பாக இலங்கையின் நிலைமை கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானி கரின் வாய்மூல அறிக்கை மார்ச் 4 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அது தொடர்பில் இலங்கை சார்பான நிலைப்பாட்டினை அவரே எடுத்துரைப்பார் எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப் பிட்டுள்ளது. (ந-7)

### தமிழ்க்...

ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தி யார் அடிகளார் தெரிவித்தார்.

தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்" எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு நேற்று கொடிகாமத்தில் இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் தீர்வை சர்வதேசத்திடம் வலியுறுத்தல் என்பது எவ்வளவு அவசிய மானதோ அந்தளவுக்கு அரசியல் கட்சி களின் ஒற்றுமையும் மிகமிக அவசி யமானது. கூட்டாக இருந்த கட்சிகள் பிரிந்த காலம் போய் ஒரு கட்சிக்குள்ளேயே பெரும்பிளவு ஏற்பட்டிருக்கின்றது.

அது எமது தமிழின இருப்பைச் சிதைக் கும். நீங்கள் எடுக்கின்ற முடிவு களை அறிவுசார் பெரியோர்கள், சட்ட வல்லுநர் களிடம் ஆலோசனை கேட்கத் தவறாதீர் கள். தமிழ்த் தலைமைகளின் சரியான ஏற்பாடும் ஒற்றுமையும்தான் எமக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்தும். அதனைத் தான் சர்வதேசமும் கவனிக்கும். மக்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழ்த் தேசிய பாதையில், இன விடுதலைப் பாதையில் செல்லட்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும் என்றார். (ந-7)

### தீ மூட்டி...

செல்வது அருகில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகி உள்ளது.

முன்பகை காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடையவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)


கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் முசலிப் பிரதேச சபையின்
தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய
திரு.பி.நிக்சன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் பிலிப்றோச்
சலேற்றம்மா



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இலங்கை தொழில்நுட்பவியல்
சேவையாளர் சங்கம் - வடமாகாணம்

(19277)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி வாசுகி விஜயநேசன் அவர்களின்
அன்புத் தந்தை

அமரர்
சின்னத்தம்பி கந்தராசா



அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு
ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(19278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்கு அதிகாரப் பகிர்வு அவசியம்

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இடித்துரைப்பு

(டில்லி)

**அதிகார பகிர்வு அனைவரையும் உள்வாங்கும் அபிவிருத்தி ஆகியவை இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்கு மிகவும் அவசியம் என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூர்ய பெரும்பான்மைவாதம் குறித்தும் எச்சரித்துள்ளார்**



இந்தியாவில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது இலங்கை 1980களின் நடுப்பகுதியில் இன மோதலை எதிர்கொண்டது. இனமோதலிற்கு முன்னர் நாங்கள் பாதுகாப்பு செலவீனங்களிற்காக மிகவும் குறைவாகவே 0.5 செலவிட்டோம்.

இது 1985 இல் மூன்று வீதமாக அதிகரித்தது பின்னர் பத்து வருடங்களில் 1995 இல் 5.9 வீதமாக அதிகரித்தது.

1985 இல் எங்களின் பாதுகாப்பு செலவீனம் 188 மில்லியன் டொலர் 2008 இல் இது 1.5 மில்லியன் டொலராக மாறியது.

1980-90களில் எங்களின் சமூகஅபிவிருத்தி சுட்டிகள் ஏனைய தென்னாசிய நாடுகளை மிகவும் சிறப்பானவையாக காணப்பட்டன.

நாங்கள் அபிவிருத்திக்காக செலவிட்டிருக்ககூடியவற்றை பாதுகாப்பிற்காக செலவிட்டோம். இலங்கையை பொறுத்த வரை நாங்கள் அனைவரும் ஜனநாயகம் குறித்து நம்பிக்கை கொண்டுள்ள போதிலும் நாங்கள் பெரும்பான்மைவாதம் குறித்து அவதானமாகயிருக்கவேண்டும்.

1970களில் இலங்கையில் கல்விசீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்டபோது அது சில சமூகத்தினர் பாரபட்சத்திற்குள்ளாக்கப்படும் நிலையை ஏற்படுத்தியது. இது அந்த சமூகத்தினர் ஆயுதங்களை ஏந்தும் நிலையை ஏற்படுத்தியது.

ஆகவே நாங்கள் மிகவும் கவனமாகயிருக்கவேண்டும். ஜனநாயகத்தில் பெரும்பான்மை என்பதை நாங்கள் நம்புகின்ற போதிலும் அபிவிருத்தி என்பது அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியாக காணப்பட வேண்டும்,சமூகத்தின் ஒரு பகுதியினருக்கான அபிவிருத்தியாக மாத்திரம் அது காணப்படமுடியாது.

ஒருநாடாக வும்முன்னோக்கி செல்வதற்கும் நாங்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளாவிட்டால் அரசியல்வாதிகள் பெரும்பான்மைவாதம் என்ற துரும்புச் சீட்டை பயன்படுத்துவார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

## இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி தொடரும் போராட்டம்



(சென்னை)

இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் இரண்டாவது நாளாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தூத்துக்குடி வரும் பாரதப் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட ஐந்து ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை நீதிமன்றம் இலங்கை வெளிக்கடை சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள ஐந்து மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், 2018 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை வசம் உள்ள 151 விசைப்படகுகளை விடுவிக்க கோரி ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினர். (நி)


32 ஆம் நினைவலைகள்

தோற்றம்-1920.06.15 மறைவு-1992.02.18

அமரர். இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)



திதி:-துதியை

26.02.2024 (இன்று)

அப்பா!

ஆயிரம் வருடங்கள் சென்றாலும் ஆறாது

எம் மனம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய

இறைவனை வேண்டும்

மகள்மார்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

பூட்டப்பிள்ளைகள்,

(பேராசிரியர் மா.சின்னத்தம்பி)

"சுபதர்சன்"

சம்பியன் லேன்,

கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.


# இராசிபலன்

26.02.2024

மாசி 14, திங்கட்கிழமை

துதியை முன்னிரவு 10.47 மணிவரை

உத்தரம் பின்னிரவு 3.59 மணிவரை

சுபநேரம் -12.29 -1.59 மணிவரை

இராகுகாலம்-7.59-9.29 மணிவரை

திருவள்ளுவர் குருபூசை

சந்திராஷ்டமம்

அவிட்டம்.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்,மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** பயணங்களின்போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** கூட்டு முயற்சிகள் வெற்றிதரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலனில் அக்கறை கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**தனுசு** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

நீ அனுபவி-அது தான் ஞானம்- பிறரை அனுபவிக்கச் செய்- அதுதான் தர்மம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராகப் பணியாற்றி இளைப்பாறுகை பெற்ற வதனி கேதாரநாதனின் மணிவிழா கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் அண்மையில் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கலாசாலையின் முன்னாள் அதிபர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு இளைப்பாறுகை பெற்ற வதனி கேதாரநாதனைக் கௌரவித்தனர். (படம்-சிவசாந்தன்)

## நூல் அறிமுக விரிவுரை

(யாழ்ப்பாணம்)

சோசலிச சமத்துவக் கட்சியின் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் வெளியீட்டில் லியோன் ட்ரொட்ஸ்கி எழுதிய காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி நூலின் அறிமுக விரிவுரை 26 ஆம் திகதி இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு அண்மையில் உள்ள வை.எம்.சி.எ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

# நாகபடுவான், கல்மடு குளங்கள் புனரமைப்பிற்கு உலக வங்கி நிதியுதவி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு ஒருங்கிணைந்த நீர் நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 450 மில்லியன் ரூபாய் செலவில் கரியாலை நாகபடுவான் மற்றும் கல்மடு குளங்கள் பாரிய நீர்ப்பாசன குளங்களின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களான கரியாலை நாகபடுவான் குளம், குடமுருட்டி குளம், கனகாம்பிகை குளம், புதுமுறிப்பு குளம், பிரமந்தனாறு குளம் உள்ளிட்ட குளங் களின் அபிவிருத்தி பணிகள் நீண்ட காலம் முன்னெடுக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் குறித்த குளங்கள் முழுமையாக நீர் தேங்கும் போது குளங்கள் ஆபத்தான நிலையிலே காணப்படுகின்றன. குறிப்பாக குடமுருட்டி குளம், கரியாலை நாகபடுவான் குளம் என்பன இன்றைய சூழலிலும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன

இந்த நிலையில் கல்மடுக் குள[illegible]து கடந்த ஆண்டில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அதன் வான் பகுதியை புனரமைப்பதற்குரிய நிதியில்லாத காரணத்தினால் வான் பகுதி புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதற்கான நிதி கோரிக்கை தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் இவ்வாண்டிலே இரு குளங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 450 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப் பெற்று இருப்பதாக நீர்ப்பாசன திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ திட்டத்தின் (I.W.W.R.M.P) கீழ் உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் கல்மடுக் குளத்தின் அணைக்கட்டு அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு 150 மில்லியன் ரூபாவும் கரியாலை நாகபடுவான் குளத்தின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கு 300 மில் லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அனுமதி கடந்த 13ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-315)


# உடையார்கட்டு தெற்கு பகுதிக்கு பேருந்து சேவையை நடத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார்கட்டு தெற்கிற்கான பேருந்து சேவை நடத்தப்பட வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1,200 வரையான குடும்பங்கள், உடையார் கட்டு தெற்கு கிராமம், மூங்கிலாறு தெற்கு, உடையார்கட்டு தெற்கு, உடையார் கட்டு கிழக்கு, குரவயல் ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். ஏ-35 பரந்தன் முல் லைத்தீவு சாலையில் இருந்து உடையார் கட்டு தெற்கு வழியாக குரவயல் இடைக்கட்டு கிராமம் வரை சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் கால் நடையாக பயணிக்க வேண்டி உள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக குரவயல் இடைக்கட்டு வரை பேருந்து சேவைகள் நடத்துங்கள் என கிராம மட்ட, பிரதேச மட்ட கூட்டங்களிலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். பேருந்து சேவை நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உடையார் கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)



முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் இயங்கி வருகின்ற இனிய வாழ்வு இல்ல மாணவர்களின் உடல் உள மேம்பாட்டினை கருதி இவ் வாண்டுக்கான இல்ல மெய் வல்லுநர் போட்டிகளின் தொடக்கமான மரதன் ஓட்ட நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது. (படம்- கிருஷ்ணகுமார்)



கட்டைக்காட்டில் இலவச கண் சிகிச்சை நிகழ்வு வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய வின்சன்டி போல் சபையினர் ஒழுங்குபடுத்திய இலவச கண் பரிசோதனை முகாம் நேற்று முன் தினம் கட்டைக்காட்டில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 200 | 310 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 140 | 160 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 650 | 600 | 600 | 500 |
| தக்காளி | 600 | 600 | 500 | 700 | 530 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 | 180 |
| கோவா | 350 | 500 | 500 | 500 | 300 |
| கரட் | 600 | 550 | 600 | 600 | 500 |
| பூசணி | 200 | 240 | 240 | 300 | 215 |
| புடோல் | 200 | 150 | 150 | 250 | 150 |
| வாழைக்காய் | 200 | 250 | 180 | 250 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 200-300 | 250 | 270 |
| பெரிய வெங்காயம் | 400 | 380 | 400 | 450 | 300 |
| பாகற்காய் | 400 | 350 | 400 | 500 | 330 |
| வெண்டக்காய் | 450 | 300 | 300 | 400 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 | 140 |
| பயற்றங்காய் | 450 | 350 | 350 | 450 | 600 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 500 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 450 | 700 | 435 |
| முருங்கைக்காய் | 1600 | 1800 | 1200 | 1600 | 1560 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 160 | -- |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50 |
| தேசிக்காய் | 150 | 250 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80-100 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | 400 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 300 | 150 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 150 | 60 | 120 |
| வல்லாரை | 40 | 50 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 150 | 70 | 200 | 100 |


# மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு

**நோயாளர் நலன்புரிச்சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்**

காலம் : 10.03.2024
இடம் : வைத்தியசாலை மண்டபம்
நேரம் : மு.ப 11.00 மணி

- புதிய அங்கத்தவர்களாக இணைந்து பணியாற்ற விரும்புபவர்கள் 01.03.2024 இற்கு முன் வருடாந்த சந்தா ரூபா 100 அல்லது ஆயுள் சந்தா 2000 ரூபா செலுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளவும்.
- அங்கத்தவர்கள் வருட சந்தா 100 ரூபாவை செலுத்தி தங்கள் உறுப்புரிமையை 01.03.2024 இற்கு முன் உறுதி செய்து கொள்ளவும்.

(9276)

செயலாளர்:
077 936 2645
பொருளாளர்:
077 349 8437

செயலாளர்,
நோ.ந.சங்கம்
மாவட்ட பொது வைத்தியசாலை
முல்லைத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் எதிர்ப்பை மீறி மாலைதீவில் சீனக் கப்பல்

(மாலைதீவு)

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய சீன ஆராய்ச்சிக் கப்பல் மாலைதீவில் நங்கூரமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சீனா கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளதுடன், தனது கடும் கண்டனத்தினையும் வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிராந்திய அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் சீனக் கப்பல் மாலைதீவு சென்றுள்ளதுடன், மாலைதீவு இந்தியாவுடன் முரண்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-01, வண்ணான் குளம் கிழக்கு ஒழுங்கை,4/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் S.கனகரட்ணம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கைச்சேர்ந்த அருணாசலம் தில்லையம்பலம் அவர்கள் 12.04.1969 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தா.சங்கரப்பிள்ளை முகதாவில் 9065ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அதே ஊரைச்சேர்ந்த சின்னப்பொடி கனகரத்தினத்திற்கு வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் குறித்த சின்னப்பொடி கனகரத்தினம் எவருக்கும் உரித்துமாற்றம் செய்யாது மரணிக்க பிதாவழி முதுசமாக 2 ஆம் பெயரான சிவலிங்கம் பெண் அன்னலட்சுமிக்கு வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வடமேற்கு பெரியதம்பிரான் கோயில் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சிவலிங்கமும் பெண் அன்னலட்சுமியும் 20.11.2006 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 3282ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதேயிடத்தைச் சேர்ந்த தங்களது மகளாகிய செல்லையா ஆனந்தராசா பெண் உதயகுமாரிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த உதயகுமாரி தனது கணவர் செல்லையா ஆனந்தராசாவுடன் சேர்ந்து குறித்த ஆதனத்தில் தனக்குள்ள உரித்தினை நீக்க சம்மதித்து அற்றோனித்தத்துவப் பத்திரம் ஒன்றினை 2023.06.14 ஆம் திகதி நிறைவேற்றியுள்ளனர்.

இருப்பினும் குறித்த உரித்து அழிக்கப்படாமல் மீண்டும், குறித்த ஆதனம் திருகோணமலை, உவர்மலை. லோவர் வீதி இல-164/7A சேர்ந்த சிவலிங்கம் பெண் அன்னலட்சுமி 26.01.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு முகம்மது சரிபு நைம்முகதாவில்11040 ஆம்இலக்க நன்கொடை உறுதிமூலம்அதே ஊரைச்சேர்ந்த தனது மகனான சிவலிங்கம் இளவேந்தனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் திருகோணமலை, உவர்மலை, லோவர் வீதி இல-164/7A சேர்ந்த சிவலிங்கம் இளவேந்தன் 25.10.2022 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி.சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 5249 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரிக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதனடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு இறை தற்காலம் வண்ணார்பண்ணை வடமேற்கு இறை உள்ளூராட்சி அதிகார சபை யாழ்ப்பாணம் மாநகர சபை பிரதேச செயலர் பிரிவு-நல்லூர் கிராமசேவகர் பிரிவு-J/98 "பிரப்பங்குளி" நில.பர 01 ஒன்று குளி 02.06 இரண்டு தசம் பூச்சியம் ஆறும் பயிர் வகைளும். இது 2005 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களினால் அளந்து வரையப்பட்ட 1968C/04 ஆம் இலக்கப்படத்தில் 1 ஆம் இலக்கத்துண்டாக சுட்டப்பட்டுள்ளது.

**எல்லைகள்**

கிழக்கு - கந்தசாமி ஜெகன்மோகனுக்கும், செல்லத்தம்பி சிவகுமாருக்கும் உரிய ஆதனம்.

வடக்கு- 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அள்வையாளர் கே.கனகசபை அவர்களினால் அளந்து வரையப்பட்ட 1968 ஆம் இலக்கப்படத்தில் 1 ஆம் இலக்கத்துண்டு.

மேற்கு - குறித்த 1968C/04ஆம்படத்தில் சுட்டிய 3ஆம் இலக்கத்துண்டான 10பத்தடியகல பொதுப்பாதை.

தெற்கு- 1968C/04 இலக்கப்படத்தில் சுட்டிய 2 ஆம் இலக்கத்துண்டு இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளனைத்தும் இன்னும் குறித்த படத்தில் சுட்டிய 3ஆம் இலக்கத்துண்டான 10 பத்தடியகலப் பொதுப்பாதை நிலத்தினூடாக பெரியதம்பிரான் வீதியிலிருந்து இவ்வாதனத்திற்கு போக்குவரத்து செய்யு முரித்தும் குறித்த பாதை நிலத்தில் இதற்குரிய பங்கும்.

தற்போது ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்.**
**யாழ்.மாநகர சபை.**

(சி-8402)


சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வேலையாட்கள் உடன் தேவை

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் போத்தல் கள் அடைப்பு நிலையத்தில் போத்தல் கள் அடைப்பதற்கு 21 வயதிற்கு மேற்பட்ட (ஆண்) வேலையாட்கள் தேவை. எனவே ஆர்வமுடையோர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தொலைபேசியில் அல்லது நேரில் சமூகம் கொடுத்து பதிவுகளை மேற்கொண்டு வேலை செய்ய முடியும். **(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)**

**விண்ணப்ப முடிவுத் திகதி 29.02.2024.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.


(C-8410)

தலைவர்/ பொதுமுகாமையாளர்,
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
மின்சார நிலைய வீதி சுன்னாகம்.

தொ.பே:-
021 224 0022,021 224 0024
074 094 6928



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.இ.கிருஷ்ணசேகரன் (B.Ed)



திருமதி.த.நிருஜா (B.Ed)

எமது பாடசாலை ஆசிரியர்களான இ.கிருஷ்ணசேகரன் மற்றும் திருமதி.த.நிருஜா இருவரும் 31.01.2024 அன்று BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தை (Bachelor of Education) பெற்றுக் கொண்டமையை இட்டு பாடசாலைச் சமூகம் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றது.

(19232)

பாடசாலைச்சமூகம், யா/பலாலி வடக்கு அ.த.க பாடசாலை.



## வாணி ரெக்ஸ்

### விசேட விலைக் கழிவுகள்

வேக்கிங் விசா/ விசிற்றிங் விசா மூலம் கனடா அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு செல்பவரா நீங்கள் அந்த நாட்டு காலநிலைக்கேற்றதான அனைத்து விதமான...



- Jacket (ஆண்/பெண்/சிறுவர்கள்)
- Sweatter வகைகள்
- Cap/மௌப்ளர் வகைகள்
- பிளாங்கற் வகைகள்
- Luggage Bag அனைத்து அளவுகள்
- கை குளோஸ்
- Ear மௌப்ளர்
- உள் T.Shirt
- Neck மௌப்ளர்
- பெலிட்

மேலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் நுளம்பு வலை போன்றவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

(C-8358)

வாணி ரெக்ஸ்
No-81, Grand Bazaar Jaffna,
021 222 5578 / 021 222 9286 / 077 748 8093



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 416





"சரியாகச் சொன்னீர்! உமக்கு எப்படித் தெரிந்தது?"

"தங்களுக்குச் சித்திரங்களின் பாஷை தெரியும். அடியேனுக்கு அபிநய பாஷை தெரியும். தங்கள் குல தெய்வம் தங்களிடம் பேசிக் கொண்டிருந்த போது அத்தெய்வத்தின் அபிநய முக பாவங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சந்தோஷம். இரவு இன்னும் ஒரு ஜாமந்தான் மிச்சமிருக்கிறது. இந்த ஸ்தூபத்தின் உச்சியில் ஏறி சிறிது நேரமாவது படுத்துத் தூங்கி விட்டுப் பொழுது விடிந்ததும் புறப்படுவோம்" என்றார் அருள்மொழிவர்மர்.

மறுநாள் உதயத்தில் சூரிய கிரணங்கள் சுளீர் என்று அடித்து வந்தியத்தேவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பின. முதல் நாளிரவு நடந்த உண்மையான நிகழ்ச்சிகள் போதாவென்று சதிகாரரர்களும் தீவைப்பவர்களும் ஊமைகளும் செவிடர்களும் மரத்தில் ஏறும் கரடிகளும் பேய் பிசாசுகளும் புத்த பிக்குகளும் மணி மகுடங்களும் ஒரே குழப்பமாக வந்தியத்தேவனுடைய கனவிலேயும் வந்து துன்புறுத்தினார்கள். சூரிய வெளிச்சத்தில் அவையெல்லாம் மாயக் கனவுகளாகி மறைந்தன. குழப்பமும் பீதியும் பறந்தன.

இளவரசரும் ஆழ்வார்க்கடியானும் முன்னதாக எழுந்து பிரயாணத்துக்கு ஆயத்தமாகியிருப்பதை வந்தியத்தேவன் கண்டான். அவனும் அவசரமாக ஆயத்தமானான். மூன்று பேரும் ஸ்தூப சிகரத்திலிருந்து இறங்கினார்கள். நடுவீதிகளின் வழியாகவே நடந்து சென்று மகா மேகவனத்தை நோக்கிச் சென்றார்கள். அந்த நந்தவனத்தின் மத்தியிலேதான் புராதனமாக ஆயிரத்து ஐந்நூறு வயதான, மிகவும் புனிதத்தன்மை வாய்ந்த போதி விருட்சம் இருந்தது.

பிக்குகளும் பிக்குகளல்லாத பக்தர்கள் பலரும் போதி விருட்சத்தை வலம் வந்தும் மலர்களைச் சொரிந்தும் வணங்கிக் கொண்டிருந்தார்கள். இளவரசர் அருள்மொழிவர்மரும் அந்தப் போதி விருட்சத்துக்கு வணக்கம் செலுத்தினார்.

"உலகத்தில் இராஜ்யங்களும் இராஜ்யங்களை ஆண்ட மன்னர்களும் மறைந்து போய் விடுவார்கள். ஆனால் தர்மம் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்பதற்கு இந்தப் போதி விருட்சம் நிதர்சனமாயிருக்கிறது!" என்று இளவரசர் மற்ற இருவரையும் பார்த்துக் கூறினார்.

இப்படிச் சொல்லிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு மூலையில் மூன்று குதிரைகள் பிரயாணத்துக்கு ஆயத்தமாக நின்றன. மூன்று குதிரைகளையும் பிடித்துக் கொண்டு மூன்று பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

இளவரசர் அங்கே சென்றதும் அவர்கள் மூவரும் முக மலர்ந்து மரியாதையுடன் வணங்கினார்கள். இளவரசர் அவர்களை ஏதோ கேட்டுத் தெரிந்து கொண்டார். வந்தியத்தேவனைப் பார்த்து "இராத்திரி எரிந்தது நாம் படுத்திருந்த மகாசேனரின் அரண்மனைதான். நாமும் அதில் எரிந்து போய் விட்டோமோ என்று இவர்கள் பயந்து கொண்டிருந்தார்கள். நம்மை உயிரோடு பார்த்ததும் இவர்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை!"

"ஆயிரத்து ஐந்நூறு வயதான அரசமரம் இன்னும் நிற்பது என்னமோ உண்மைதான். ஆனால் தர்மம் செத்துப்போய் எத்தனையோ நாளாகிவிட்டது!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.


"இனி ஒரு தட்வை அவ்விதம் சொல்லாதே! நான் ஒருவன் உயிரோடிருக்கும் போது தர்மம் எப்படிச் சாகும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

(தொடரும்)

---

# சிறுவர் அரங்கம்

## யார் சிறந்த மாணவன்



ஓர் ஊரில் ஒரு குருகுலம் நடந்து வந்தது. அங்கு பயின்று வந்த சீடர்கள் அனைவருமே பெரும் திறமைசாலிகள் என்று அனைவராலும் பேசப்பட்டும் வந்தனர். அந்த குருகுலத்தில் வருடா வருடம் சிறந்த சீடன் யார் என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிறந்த சீடன் என்ற பட்டமும் வழங்கப்படும்.

இந்த வருடமும் யார் சிறந்த சீடன் என்பதை தேர்ந்தெடுப்பதற்கான நேரம் வந்தது. குருகுலத்தின் தலைமை குருவும் யார் சிறந்த சீடன் என்பதை தெரிந்து கொள்வதற்காக ஆலோசனையில் இறங்கினார்.

குருகுலத்தில் உள்ள அனைத்து குருக்களையும் அழைத்தார். அவர்களிடம் ஆலோசனை நடத்தினார். யார் சிறந்த மாணவன் என்று தேர்ந்தெடுக்க சிபாரிசு செய்ய சொன்னார். இறுதியாக எல்லோரிடமும் கலந்து பேசி மூன்று சீடர்களை தேர்ந்தெடுத்தார். ஆனால் சிறந்த சீடன் என்ற பட்டம் ஏதேனும் ஒரு மாணவனுக்கு தான் சென்று சேர வேண்டும் என்பது குருகுல விதிகளில் ஒன்று.

ஆனால் இந்த மூன்று மாணவர்களும் ஒருவருக்கொருவர் எதிலும் சளைத்தவர்கள் இல்லை. கல்வி, வீரம் மற்ற கலைகள் என எல்லாவற்றிலும் சமமான மதிப்பெண்கள் பெற்றிருந்தனர்.

சரி இந்த மூவரில் யார் சிறந்தவர் என்று கண்டுபிடிக்கும் பொறுப்பை தலைமை குரு ஏற்றுக் கொண்டார். தலைமை குரு மிகவும் யோசித்து கொண்டிருந்தார். என்ன செய்யலாம்? எப்படி இவர்களில் சிறந்தவரை கண்டுபிடிப்பது? இதில் பாரபட்சம் பார்க்காமல் செயற்படுவது என்பது ஒரு குருவின் கடமை.

மிகுந்த யோசனைக்கு பிறகு ஒரு போட்டியின் மூலம் மூவரில் யார் சிறந்தவர் என்று கண்டுபிடிக்கலாம் என்ற முடிவிற்கு வந்தார். இப்பொழுது என்ன போட்டி வைக்கலாம் என்று யோசித்தார்.

மனதில் ஏதேதோ கணக்கு போட்டு அந்த மூன்று சீடர்களையும் தன்னுடைய அறைக்கு அழைத்தார். அந்த மூன்று மாணவர்களும் தலைமை குருவின் அறைக்கு வந்து சேர்ந்தனர். கூறுங்கள் குருவே என்று மூவரும் கூறினார்கள். இதில் கூட இவ்வளவு ஒற்றுமையா என்று வியந்தார் குரு.

சரி வாருங்கள் சீடர்களே. உங்களுக்கு ஒரு வேலை சொல்வதற்காக தான் இங்கு அழைத்தேன். அதை நீங்கள் மறுத்து விடக்கூடாது என்றார். சீடர்களும் நாங்கள் நிச்சயம் நீங்கள் சொல்லும் வேலையை செய்து முடிப்போம் குருவே என்றனர்.

நான் ஆசை ஆசையாக கிளி ஒன்றை கூண்டில் வைத்து வளர்த்து வந்தேன். அதற்கு உணவு அளிப்பதற்காக இன்று காலை கூண்டை திறந்தேன். அந்த நேரத்தில் அந்த கிளி கூண்டை விட்டு வெளியே வந்து பறந்து சென்று விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டமைப்பை உடைத்து தன்னை குழியில் விழுத்திய சம்பந்தர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வலிதான தமிழ் அரசியல் அமைப்பாக பரிணமித்திருந்தது.

அந்த அரசியல் அமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆயுதக்குழுக்களும் ஜனநாயக நீரோட்டத்தில் இயங்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பின் உருவாக்கத்தின்போது அதில் அங்கம் பெறும் தமிழ் அரசியல் கட்சிகளை அனைவரும் ஒருமுகமாக இணங்கி ஏற்றுக் கொண்டிருந்தனர்.

எனினும் 2009ஆம் ஆண்டு மே 18இல் விடுதலைப் புலிகள் அமைப்பு அஸ்தமனமாகிப்போக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தகர்த்து தாம் தனித்து இயங்க வேண்டும் என்ற நினைப்பு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரிடம் ஏற்படுகிறது.

இந்த நினைப்பு அவரின் சொந்த நினைப்பா அல்லது இரவலாகக் கொடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழிக்க வேண்டும் என அதன் தலைவராக இருந்த இரா.சம்பந்தர் நினைத்த கணத்திலேயே அவரின் பதவிக்கு ஆபத்து வந்ததோடு, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் அது காலப்பிழையாயிற்று.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழித்து தமிழரசுக் கட்சியை தனித்துவமாக்க இரா.சம்பந்தர் எண்ணியது ஒருபுறம்.

மாறாக கூட்டமைப்பை இல்லாது செய்வதன் மூலம் தான் நினைத்ததை நிறைவேற்ற முடியும் என்ற நினைப்பு இரா.சம்பந்தரை ஆட்கொண்டிருந்தது.

இந்த நினைப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அவரின் இலக்கேயன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழித்தால், கூடவே தனது தலைமைப் பதவியும் இல்லாது போகும் என்ற சிந்தனை சம்பந்தரிடம் அறவே இருக்கவில்லை.

இதற்கு இன்னுமோர் காரணம் உண்டு. அதாவது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசா இருந்தாலும் அவரை ஓரங்கட்டிவிட்டு தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை தான் அலங்கரிக்கலாம். தன்னை மீறி எவரும் ஆடமாட்டார்கள் என்ற சுயநம்பிக்கையும் சம்பந்தரிடம் இருந்தது.

இவை காரணமாகவே கூட்டமைப்பை இரா.சம்பந்தர் உடைத்தார். இங்குதான் அவர் அரசியல் தோல்வியைச் சந்திக்கின்றார்.

ஆம், கடந்த பொதுத் தேர்தலின்போது மாவை சேனாதிராசா தேர்தலில் வெற்றி பெற முடியாமல் போக, அந்த நிலைமை சம்பந்தரையும் மாவை சேனாதிராசாவையும் அரசியல் ரீதியில் உடன்பாடற்றவர்களாக ஆக்குகிறது.

இந்த உள்ளக முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக இருந்த ஒரே ஆயுதம் நியமன எம்.பியாக இருந்தாலும் அதனை தமிழரசுக் கட்சியின் தலைவருக்கு வழங்க சம்பந்தர் உடன்படவில்லை.

இந்த இடத்தில் இருந்துதான் சம்பந்தரை முதன்மைப்படுத்துவதை மாவை சேனாதிராசா தவிர்த்து வருகிறார்.

இதை இன்னொரு பக்கத்தில் கூறுவதாயின், மாவை சேனாதிராசாவை தாம் ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டதாக இரா.சம்பந்தரும் அவரோடு இணைந்தவர்களும் கருதினர்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கான தேர்தலுக்குப் பின்னர் மாவை வலிமை பெறுகிறார். இந்த வலிமை நிரந்தரமானதா என்பது நமக்குத் தெரியாதாயினும் மாவையின் பார்வை சம்பந்தரை முடக்கும் என்பது மட்டும் சர்வநிச்சயம்.

# தமிழ் மக்களின் ஒற்றுமையை சிதைக்க சிங்களப் பேரினவாதம் கடும் பிரயத்தனம்

## எமைக்காக்க மூதவை அவசியம் - ஸ்ரீநேசன் எடுத்துரைப்பு -

(கொடிகாமம்)

தமிழ் மக்களின் ஒற்றுமையினை சிதைப்பதற்காக சிங்களப் பேரினவாதம் பல வழிகளைக் கையாள்கிறது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீ நேசன் தெரிவித்துள்ளார்.

கொடிகாமத்தில் நடைபெற்ற தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம் என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற தமிழ் மக்களைப் பிரிப்பதற்காக அவர்களின் ஒற்றுமையைச் சிதைப்பதற்காக சிங்களப் பேரினவாதம் ஐந்து யுத்திகளை பயன்படுத்துகின்றது. அவை பணம் கொடுத்தல், பதவி கொடுத்தல், பயமுறுத்தல், பணயம் வைத்தல், படுகொலை செய்தல் என்பவையாகும். கடந்த காலங்களில் வரவு செலவுத்திட்டத்தில் தங்களுக்குச் சார்பாக வாக்களிக்க வைப்பதற்காக பணயம் வைக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

எமது அரசியல் சக்திகள் காலத்துக்குக் காலம் தமிழ்த் தேசியப் பாதையில் நின்று தடம் மாறுகின்ற போது அல்லது தங்களை அறியாமல் தடம் புரளுகின்ற போது சரி, பிழைகளை எடுத்துக்கூறி வழிப்படுத்துவதற்கு எமக்கு ஒரு மூதவை அவசியம்.

அந்த மூதவையில் சுயநலமற்ற புத்திஜீவிகள், ஆன்மீகத் தலைவர்கள் போன்றோர் காணப்பட வேண்டும். அவர்கள் தமிழ்த் தேசியத்தின் வழி நின்று தவறுகின்ற அரசியல் சக்திகளை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், தென்கயிலை ஆதீன குரு முதல்வர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், க.கோடீஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (ந-7)

# ரஷ்ய, உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியின்றிய சுற்றுநிருபம்

## விசாரணைகளை முன்னெடுக்க ஜனாதிபதி உத்தரவு

நாட்டில் தங்கியிருக்கும் ரஷ்ய மற்றும் உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் 14 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அமைச்சரவையின் அனுமதியின்றி வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட வீசா நீடிப்புகளை இரத்து செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

# பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு

## இலவச ஆங்கில கற்கை

2023 ஆம் ஆண்டின் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஆங்கில மொழி வழிகாட்டல் மற்றும் தொழில்சார் பாடம் ஒன்றை இலவசமாகக் கற்பதற்கு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் உள்ள 300 நிலையங்களைப் பயன்படுத்தி இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் குறித்த மாணவர்களுக்கும் அதே வகையான பயிற்சித் திட்டங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு - ஜம்பட்டா வீதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ந-7)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகளிடம் மன்னிப்பு

நேற்று கொழும்பு விமான நிலையத்தில் ஏற்பட்ட விமான தாமதம் தொடர்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தற்காலிக மற்றும் திட்டமிடப்படாத செயற்பாடுகள் காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையினாலும் இது ஏற்படவில்லை என்றும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தாமதத்தினால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு அனைத்து பயணிகளிடமும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மன்னிப்பு கோருவதாகவும்.

அவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாத வகையில் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமான சேவை நிறுவனம் செயற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சீனோர்-படகுதுறை-காரைநகர், கடற்படைத்தளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் தரம் -1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவானது இன்று திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் வித்தியாசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாசாலையின் அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன், பழைய மாணவருமான குமணன் குகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆசிரியர் ஆலோசகர் திருமதி க.சோதிதாசன், பழைய மாணவர் திருமதி சகுந்தலாதேவி ஜெகநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கரும்பூலா

**Botanical Name-
phyllanthus multi florus
Family-
Euphorbiaceae.**

பெருஞ்செடி அல்லது சிறுமர வகையைச் சேர்ந்தது. நிறைய கிளைகளைக் கொண்டிருக்கும். ஒழுங்கான ஒருபாலான பூக்கள். றோஸ் நிறமானவை. ஊதா கலந்த கறுப்பு நிற உருண்டையான பழங்கள் சதைப்பிடிப்பாகவும் பிரகாசமாகவும் இருக்கும். வருடம் முழுவதும் பூக்களைக் காணலாம். வறண்ட பிரதேசங்களில் இதன் பரம்பலைக் காணலாம். இலைகளுக்குக் கீழ் பழங்கள் காணப்படுவதால் காட்டுக்கீழ்க்காய் நெல்லி எனவும் அழைக்கப்படும்.

இதன் இலைகள், பழங்கள்,






தண்டுகள், வேர்கள் அனைத்தும் மருத்துவக் குணம் மிக்கவை. இதன் பழங்கள் இனிப்புச் சுவையுடையது. உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்தக்கூடியது. இதனுடைய பூக்கள், காய்கள், இலைகள் துவர்ப்புச் சுவையுடையது. இதனுடைய குச்சிகளால் (செலுலோஸ் இல்லாத) பல் துலக்கலாம். பல் ஈறுகளில் இருந்து இரத்தம் வருவதைத் தடுக்கும்.

பற்களைத் திடகாத்திரமாக வைத்திருக்கும். கரும்பூலா மூலியானது தோல் வறட்சி, இளநரை, என்புவிரிசல், மலக்கட்டு, மூலநோய், பல்நோய், பல்ஆட்டம் போன்றவற்றை நிவர்த்தி செய்யும். விந்து நீத்துப் போதலுக்கும் பயன்படுத்தலாம்.

இளநரைக்கு கரும்பூலா பழம் ஒரு கைப்பிடியளவு, கரும்பூலா இலை இரண்டு கைப்பிடியளவு, கர்சலாங் கண்ணி ஒரு கைப்பிடியளவு, கறிவேப்பிலை ஒரு கைப்பிடியளவு, மொசுமொசுக்கை இலை ஒரு கைப்பிடியளவு, சின்ன வெங்காயம் -10 இலை எல்லாவற்றையும் இடித்துச் சாறு எடுத்து 500 மில்லி தேங்காய் எண்ணெயில் கலந்து 10 கிராம் கடுக்காய் தோல் பொடித்து சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாக காய்ச்சிக் கொண்டு வரும் போது எண்ணெய் நிறம் மாற ஆரம்பிக்கும். அந்த தருணத்தில் இறக்கி ஆற விட்டு போத்தலில் இட்டு வைத்திருக்கவும். இந்த தைலத்தை தலைக்கு தடவி வர இளநரை கருமை நிறமாக மாற ஆரம்பிக் கும். இதன் பழ ங்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கிடைக்கும் காலங்களில் சாப்பிட்டு வர உடலிற்கு பலத்தை கொடுக்கும். அதேநேரம் நன்கு கருமையான கூந்தலும் வளரும். நன்றாக முற்றிய தேங்காயை எடுத்து அதன் கண்ணில் துவாரமிட்டு உள்ளிருக்கும் இளநீரை வெளியே ஊற்றிவிட்டு தேங்காயின் முக்கால் பாகத்திற்கு கரும்பூலா பழங்களைப் போட்டு நிரப்பி மூங்கில் குச்சிகளால் துவாரத்தை அடைத்து காரிக்கண் துணியால் தேங்காயை நன்கு சுற்றி ஈரமான சதுப்பு நிலத்தில் 30 நாட்கள் ஒரு அடி குழி தோன்றி புதைத்து வைத்து எடுத்து தேங்காய் ஓட்டை நீக்கி தேங்காயையும் உள்ளிருக்கும் கரும்பூலா பழங்களையும் சேர்த்து கல்லத்தில் வைத்து நன்கு அரைத்து ஒரு வாணலியில் போட்டு 1000 மில்லி தேங்காய் எண்ணெய் இட்டு பதமுற காய்ச்சி வார்த்து (பூலாத் தைலம்) முடிக்கு தடவி வர முடி நன்கு செழித்து வளரும். உடலுக்கு குளிர்ச்சியை கொடுத்து கண் எரிச்சலையும் நீக்கும். இதன் பழங்களை சாப்பிட்டு வர இரத்தம் சுத்தியாகும். குடலில் ஏற்படும் அழற்சியையும் நீக்கக் கூடியது.

கரும்பூலா இலைகளை நன்கு கழுவி உலர்த்தி பொடித்து அரித்து அரித்த பொடியை புண்களில் தூவ புண்கள் ஆறும். இளநரைக்கு மூலிகைச் சாயப்பொடி, கரும்பூலா இலைகள்-100கிராம், கரிசலாங்கண்ணி இலைகள்-100 கிராம், கறிவேப்பிலை-100கிராம், மருதோண்டி இலை-100கிராம் எல்லாவற்றையும் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முடியின் அளவிற்கு ஏற்ப செயற்கை சாயப்பொடிக்கு பதிலாக இப்பொடியை அளவாக எடுத்து வெந்நீரில் குழைத்து முடிக்கு தடவி 30 நிமிடங்கள் ஊற விட்டு பின்பு தலைமுழுகி வர இளநரை குறைந்து முடி கருமை நிறமடையத் தொடங்கும்.

இதன் இலைச்சாற்றில் 10 மில்லி அளவு காலை, மாலை பருகி வர இரத்த மூலம் குணமாகும். கரும்பூலா வேர்ப்பட்டையை 50கிராம் அளவு எடுத்து ஒன்றிரண்டாக இடித்து 250 மில்லி நீர்விட்டு பாதியாகும் வரை காய்ச்சி வடிகட்டி தாங்கக்கூடிய சூட்டில் வாய் கொப்பளித்து வர பல்லீறுகளில் ஏற்படும் இரத்தக்கசிவு நீங்கும். இக்குடிநீரில் 15 மில்லி காலை, மாலை குடித்து வர குருதி மூலம், கை-கால் மூட்டுக்களில் ஏற்படும் வலி குறையும்.

# இன்று ஒரு தகவல் 48



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஞானம்

ஒரு பெரிய சந்தை. பல பேர் வந்துபோகின்ற ஓர் இடம்!

அங்கே ஒருத்தன் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தான். அதிக காலமாக அவன் அதே இடத்திலே நின்று கொண்டு பிச்சை எடுத்து கொண்டு இருந்தான். ஆனாலும் அவன் வாயை திறந்து பிச்சை போடுங்க என்று யாரையும் கேட்பதில்லை!

தினமும் காலையிலே வருவான். அந்த இடத்தில் வந்து வலது கையை நீட்டியவாறு நிற்பான். வாயை திறந்து எதுவும் பேசுவது இல்லை.

அந்த வழியாலே வந்து செல்பவர்கள் எல்லாம் அவன் கையில் காசு போட்டு விட்டு செல்வார்கள். அவன் ஐம்பது வருடங்களாக அந்த இடத்தில் பிச்சை எடுத்து கொண்டு இருந்தான். திடீரென்று ஒருநாள் அவன் செத்துப் போய்விட்டான். செத்துப்போய் அந்த இடத்திலே விழுந்து விட்டான்.

ஊர் ஜனங்கள் எல்லாம் பார்த்தார்கள்!

ஐயோ பாவம்! இப்படி அநாதையாக விழுந்து செத்துப்போய்விட்டானே என்று பரிதாபப்பட்டார்கள்.

அந்த ஊர் மக்கள் அவன் மேல் மிகுந்த பரிதாபப்பட்டார்கள்.!

பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தால் கூட அவன் ஒரு வித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவு செய்வதில்லை.

ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு தீர்மானம் எடுத்தார்கள். அந்த இடத்தில் அவனுக்கு ஒரு சிலை வைக்க வேணும் என்று.

உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பல பேர் முன்வந்து தாராளமாக பணம் கொடுத்தார்கள். அதிகமாக பணம் கிடைத்தது.

அந்த பிச்சைக்காரன் இருந்த இடத்திலேயே அத்திபாரம் தோண்ட ஆரம்பித்தார்கள். இரண்டு அடி ஆழம் தோண்டி இருப்பார்கள். திடீரென்று டங் டங் என்று ஒரு சத்தம் கேட்டது.

அவசரம் அவசரமாக தோண்டி, உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள். உள்ளே ஒரு செப்பு குடம் இருந்தது. அதை எடுத்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள்.

அதனுள்ளே ஏராளமாக தங்கம் -வெள்ளி நாணயங்கள் காணப்பட்டன.

அதை பார்த்ததும் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு ஆச்சரியம்!

ஒருத்தர் சொன்னார். பார்த்தீங்களா? இந்த பிச்சைக்காரன் தன்னோட காலுக்கு அடியில் புதையல் இருக்கிறது தெரியாமல் போறவர்கள் வாறவர்களிடம் எல்லாம் பணத்திற்காக கையேந்தி கொண்டு இருந்தே செத்துப் போய்விட்டான் என்று சொன்னார்.

அந்த வழியால ஒரு துறவி வந்தார். அந்தக் கூட்டத்தைப் பார்த்து சொன்னார். ஆமாம். "மனிதன் தன்னோட மனதிலே குவிந்து இருக்கிற திறமையையும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்ளுவது இல்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு அதை வெளியே தேடிக்கொண்டு காலம் முழுவதையும் கழிக்கிறார்கள் என்று சொல்லி விட்டு அந்த துறவி சென்று விட்டார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்களாம்.

இந்த கதை எதற்கு என்றால், "நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதை நாம் சரியாக புரிந்து கொள்வது இல்லை. ஆனால் அதை எல்லாம் தேடி நாம் வெளியே அலைந்து கொண்டு இருக்கிறோம்" என்பதை சுட்டிக்காட்டுவதற்குத்தான்.

தெருவிலே இருக்கின்ற கடைக்கு சென்று அரைக் கிலோ சந்தோசத்தை வாங்கி வா என்று சொல்ல முடியுமா?

ஜீனாய்ட் என்று ஒரு ஞானி இருந்தார்.

ஒரு சீடன் அவரிடம் வந்து உங்களிடம் ஞானம் என்கின்ற முத்து இருக்கிறதாமே. எனக்கு அதிலே கொஞ்சம் தாருங்கள். இல்லை என்றால் அதை எனக்கு விற்று விடுங்கள் என்று கூறினான். அதுக்கு அந்த ஞானி உனக்கு நான் விற்பதாக இல்லை. ஏனென்றால் உன்னால் அந்த விலையை கொடுக்க முடியாது. சரி கடனாகக் கொடுக்கலாம் என்றால் அதையும் ஏற்றுக்கொள்ள மாட்டாய்.

அதனாலே என்னை மாதிரி நீயும் கடவுள் என்னும் சமுத்திரத்திலே முழ்கி எழுந்திரு! நீயும் ஒரு முத்து எடுத்து கொண்டு வரலாம் அப்படி என்றார்.

இது எல்லாம் வெளியில் வாங்கிற விடயம் இல்லை. முயற்சி செய்ய வேண்டும்.ஒரு ஆசாமி பத்தாயிரம் ரூபா பணம் லாட்டரி சீட்டிழுப்பில் பரிசு விழுந்ததாக கனவு கண்டார்.

விடிந்து எழுந்து கொண்டதும் அழுது கொண்டே உட்கார்ந்து இருந்தார்.ஏன் என்று கேட்டால். கண்டது கனவா போய் விட்டது என்பதற் காகவா?இல்லை. ஏன் ஐயா அழுகுறீர்கள் என்று கேட்டால் "கனவில விழுந்தது ஒரு லட்சமா இல்லாம போய் விட்டதே" என்று.

அதை நினைத்தால் தான் எனக்கு ரொம்ப ஆத்திரம் வருகிறது என்று சொல்லி விட்டு மறுபடியும் சத்தமாக "ஓ" என்று அழ ஆரம்பித்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு இலட்சம்...

யில், தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வருடாந்தம் இந்த நிதி உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு 3600 மில்லியன் ரூபாயை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் பாடசாலை உபகரணங்கள், பயிற்சி புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்வது போன்ற விடயங்களில் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயன்முறை மற்றும் அது தொடர்பான அனைத்து தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund மூலம் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும். (ந-7)

## இணையப்...

ரிச்சர்ட் வர்மாவிற்குத் தெளிவான விளக்கத்தினை வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே இவ்விடயம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணையப் பாதுகாப்புச் சட்டத்தில் இருக்கின்ற சில உட்பிரிவுகள் குறித்து பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மா தமது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் அரசாங்கம் குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக பிரதி இராஜாங்கச் செயலாளருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு சிவில் அமைப்புக்களின் பரிந்துரைகளையும் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதையும் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவிற்குத் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம் என்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். (ந-7)

## நிர்வாக சபை...

திய வங்கி தயாராகவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருப்பதாகக்கூறி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மத்திய வங்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதேவேளை இதுகுறித்து விளக்கமளிப்பதற்காக எழுத்துமூல அவகாசம் கோருமாறு நிர்வாக சபையினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக, நிதியமைச்சராகக் கடமையாற்றும் ஜனாதிபதிக்கு கடந்த 22ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அவகாசத்தின் பின்னர் உரிய பாராளுமன்றக் குழுவின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கி தயாராகவுள்ளதாக அவ்வறிக்கையில் மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தரம் 6இல்...

எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வராப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

மாணவர்கள் தமது அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்ப பூர்வீக கைத்தொழில்களை இணைத்து எஞ்சிய 03 பாடங்களையும் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும், பாடசாலைகளுக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றிருக்க வேண்டும், அனைத்து வலயத்திலும் அமைக்கப்பட்டுள்ள கணினி வளமையங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பாரிய வேலைத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்கும் அதேவேளை, மென்பொருள் உருவாக்கம் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக பிராந்திய மட்டத்தில் குழுவொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## அரச கொள்கை...

தேரர்களால் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க, மத்தள, இரத்மலானை விமான நிலையங்கள் போன்ற தேசிய பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமான அரச நிறுவனங்களை வெளிநாட்டவர்களுக்கு மாற்றுவது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என தேரர்கள் முன்னாள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கலந்துரையாடலில் முக்கிய தேரர்கள் 10 பேர் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்களுடன் இணைந்து கொண்டதுடன், கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுஜன பெரமுன கட்சிக்கே மக்கள் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதால் அதன் தலைவர்கள் இந்த நிலையைத் தடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர். (ந-7)

## நல்லி...

முன்னெடுக்கவில்லை எனவும், புதிய ஆணைக்குழுவில் தமக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தினால் அதற்கு ஆதரவு வழங்க முடியாது எனவும் சுவிஸ் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இலங்கையில் சட்டவாட்சி, மனித உரிமை, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளின் நலன் தொடர்பில் செயற்படும் அமைப்புக்களுடன் சுவிட்ஸர்லாந்து இணைந்து பணியாற்றி வருகின்றது.

அத்தோடு ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் இலங்கை ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமையினை கட்டியெழுப்புவதில் காட்டிவரும் அசமந்த போக்கு காரணமாக சுவிஸ் அரசாங்கம் மேற்படி நிலைப்பாட்டை எடுத்துள்ளது. (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



லக்கி 7 VIP
திகதி 2024.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 0227
N 3 6 8 1 0 7 N

தன நிதானய
திகதி - 2024.02.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1431
F 01 09 42 81 F
63068

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3643
சீட்டிழுப்பு திகதி 25.02.2024
D 12 21 58 59
D 25312

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 0710
மேஷம் 05 16 31 36 மேஷம்
57776 29

மஹஜன சம்பத
திகதி 2024/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 5401
Z 9 0 9 2 7 7

மெகா பவர்
திகதி 25/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1749
S 21 42 47 73 78
99641

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.02.2024 வெற்றி வாரம் 109 வர்ணம் பழுப்பு
V 2 2 2 5 8 3
W
29,813,996.00
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2375 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.25 தினம் ஞாயிற்றுக்கிழமை
11 35 38 60 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,643,112/-

சனிதா
திகதி 2024.02.25 வெற்றி வாரம் 4536
04 29 31 62 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,944,213.20

சசிரி
வெற்றி வாரம் 446
சீட்டிழுப்பு திகதி 2024.02.25
கபிலம்
07 12 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,434,880/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4087 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.25 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 02 42 48 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,648,146.80

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 21 36 41 44 70
சீட்டிழுப்பு வாரம் 1551
வர்ணம் மஞ்சள்
திகதி 25.02.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 508,167,530.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2201
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2024.02.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,990,868.80
35 52 57 73 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503
(19118)


# மண்மேடு சரிந்ததால் ஒருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி - அணியவத்தைப் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ந-7)


காணி விற்பனைக்கு

புலோப்பளை பளையில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 56 47 848
(19238)

மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பம் அரச தொழில் புரிந்து தற்பொழுது லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். நேரில் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

076 63 63 028
(19249)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8416)

சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8414)

விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு :
074 17 37 684
(19242)

வேலையாட்கள் தேவை

அலுவலகம் ஒன்றில் பணியாற்ற கணனி அறிவு மற்றும் ஆங்கிலம் கதைக்க தெரிந்த பெண் பிள்ளை தேவை.
(C-8413)

Hybrid international hub(pvt) ltd Jaffna
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
077 815 5920, 021 222 1265

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19236)

076 825 7716 (ஆகாஸ்)

மணப்பெண் தேவை

- நல்லூர், இந்து, கௌரவகுலம், 1976, அச்சுவினி, MSc, Network Engineer, Australia Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மானிப்பாய் இந்து, கௌரவகுலம், 1989, விசாகம், Double Degree, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1990, மகம், BBA, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கந்தர்மடம், இந்து, கௌரவகுலம், 1977, உத்திரட்டாதி, MSc, கனடா Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1989, புனர்பூசம், BSc,கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புத்தூர் - நவிண்டில், இந்து, கௌரவகுலம், 1984, பரணி MSc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில் - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1978, ரோகிணி, BE Electronics Engineer, Denmark மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து கௌரவகுலம், 1993, புனர்பூசம், Bachelor, Software Engineer, Sweden மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில் - கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1978, உத்திராடம், Master of Engineering Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(19279)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 077 803 8193

வேலை வாய்ப்பு

நரம்பியல் புனர்வாழ்வு மையத்தில் தாதிய உதவியாளர் (Nurse Assistant)

தகைமைகள்
- ★ தாதிய முன் அனுபவம் விரும்பத்தக்கது
- ★ தாதிய உதவியாளர் 1 வருட கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல்

சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்

உங்களுடைய CV ஐ imsmanipay.info@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்
(C-8411)

Green Memorial Hospital, Manipay ☎ 0212256990 0760163515


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
1990 . 04 . 04

மறைவு
2022 . 02 . 26

அமரர்

### யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்

காலச்சக்கரம் சுழன்றதுவோ - உன்
கால்களில் பந்துகள் சுழன்று
சிகரங்கள் தொட்ட
நின் சாதனைகள் - உம்
முகவரிகள் பகர்ந்து நின்றிடவே
பாதியில் பரிதவித்து
கிடக்கின்றதே...!

(19264)

"ராஜஸ்தான்"
கருணாநிதி ச.ச. நிலையம், வல்வெட்டி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
27 - 04 - 1958

மறைவு
23 - 02 - 2024

### இராமச்சந்திரன் கனகபுஸ்பராணி

பலாலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் கனகபுஸ்பராணி அவர்கள் கடந்த (23.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், சுரேஷ் (உரும்பிராய்), சுரேக்கா (ஜேர்மன்), சுகிதா (பிரான்ஸ்), சுபேஷ் (பிரான்ஸ்), சுபாஜினி (சுவீடன்) மற்றும் துளசி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் உரும்பிராய் தெற்கு இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சேமபுலம் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (19026)

தகவல் : குடும்பத்தினர்
077 513 1130(மகன் சுரேஷ்)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org